# இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி
# (சார்பு நீதிமன்றம், சங்ககிரி)

முன்னிலை : **திருமதி. S. உமா மகேஸ்வரி, B.A., L.L.M.,**
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர் / சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம், சித்திரைத்திங்கள் 7 ம் நாள் புதன் கிழமை
2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ம் நாள் புதன் கிழமை

**இ.வி.கோ.ம.எண். 963 / 2011**
**C.N.R. No: TNSA07-000006-2011**

சின்னசாமி (எ) சின்னுசாமி, த/பெ ராமகவுண்டர், (வயது 44)
நொச்சிப்பட்டி அஞ்சல், N-மேல் வெள்ளாளப்பட்டி,
ஊத்தங்கரை வட்டம், கிருண்ணகிரி மாவட்டம்.
தற்போதைய முகவரி - அக்ரஹாரம், வைகுந்தம் அஞ்சல்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம். ..மனுதாரர்

**/எதிராக/**

1. பெரியண்ணன், த/பெ பெரியசாமி,
   144 – B. செங்கோடு, ஜங்கமாசமுத்திரம் அஞ்சல்,
   கெங்கவள்ளி வட்டம், சேலம் மாவட்டம்.
2. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் கிளை)
   எண் 12, ராமகிருஷ்ணா சாலை, சேலம் -7. ..எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.கோபாலகிருஷ்ணன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமானுஜம் அவர்களும் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், தீர்ப்பாயத்தில் அழைத்த போது ஆஜராகாத காரணத்தினாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு, மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்த தீர்ப்பாயம் ஆய்ந்து பிறப்பிக்கும்,

## உத்தரவு:-

இம்மனு கடந்த 25.10.2011 ம் தேதி அன்று நடந்த சாலை விபத்தில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.12,00,000/-ம், பின்வட்டி மற்றும் செலவுத்தொகை கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதி 3-ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுவின் சுருக்கம் :</u>**

கடந்த 25.10.2011 ம் தேதி நள்ளிரவு 12.20 மணியளவில் மனுதாரர் சேலம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பிடத்தின் அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது ஆத்தூர் பிட் பக்கம் இருந்து வந்த TN 30 N 0577 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மேற்படி மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாகவும், மேற்படி விபத்தில் மனுதாரர் கீழே விழுந்ததில் மேற்படி பேருந்து மனுதாரரின் வலது காலில் மீது ஏறியதில் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவுகள் ஏற்பட்டதாகவும் மற்றும் உடலில் பல பாகங்களில் பலத்த அடிபட்டு காயங்கள் ஏற்பட்டதாகவும், உடனடியாக சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், தனக்கு ஏற்பட்ட ஊனத்திற்கும், வருமான இழப்பிற்கும், உடல்வலி, மனவேதனை மருத்துவசெலவு ஆகியவற்றிற்கு ரூ.12,00,000/- இழப்பீடாக வழங்க வேண்டுமென மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமனுஜம் அவர்கள் 03.02.2012 ம் தேதி ஆஜராகியும், 05.06.2013 வரை எதிருரை தாக்கல் செய்யாததாலும், தீர்ப்பாயத்தில் அழைத்த போது ஆஜராகாத காரணத்தினாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் 05.06.2013 அன்று தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டனர்.

3. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,</u>**

1) இம்மனுவில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம்?
2) விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் ?
3) மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு?

4. இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகி விட்டதால் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **தீர்வுக்குரிய பிரச்சனை எண் :- 1**

இம்மனுவில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், மனுதாரர் தன்னுடைய மனுவிலும், முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்திலும் தான் சம்பவத்தன்று சேலம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பிடத்தின் அருகே கிழக்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது ஆத்தூர் பிட் பக்கம் இருந்து வந்த TN 30 N 0577 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து தன் மீது மோதியதில், தான் கீழே விழுந்துவிட்டதாகவும், அப்போது மேற்படி பேருந்து தன் வலது காலில் மீது ஏறியதில் தனக்கு வலது முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவுகள் ஏற்பட்டதாகவும் மற்றும் உடலில் பல பாகங்களில் பலத்த அடிபட்டு காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார். மேற்படி விபத்து சம்பவத்தை உறுதிப்படுத்துவதற்காக 1 ம் எதிர்மனுதாரரின் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ம.சா.ஆ.1 ஆகவும், குற்ற இறுதியறிக்கை நகல் ம.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். மேலும், விபத்து சம்பவம் குறித்து நிரூபிக்க தன்னுடைய விபத்து பதிவேட்டு அறிக்கையை ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கையில் ம.சா.ஆ.1 ல் எதிரியாக TN 30 N 0577 அரசு பேருந்தின் ஓட்டுநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.6 குற்ற இறுதியறிக்கையில், 1 ம் எதிர்மனுதாரர் பெரியண்ணன் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சி சிவநாதன் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 தனது பிரமாண வாக்குமூலத்தில் சம்பவத்தின் போது தான், மனுதாரர், மனுதாரரின் மகன் மணிகண்டன் ஆகிய மூவரும் சேலம் பேருந்து நிலையத்திற்குள் நடந்து சென்ற போது அரசு பேருந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

6. இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாயத்தில் ஆஜராகி சம்பவ விபத்தை குறித்தோ, மனுதாரர் கட்சியை மறுத்தோ வழக்கினை நடத்த ஆஜராகவில்லை. எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகி உள்ளனர். ஆகவே மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கு விபத்திற்கு காரணம் 1 ம் எதிர்மனுதாரரின் அதிவேக, அஜாக்கிரதையே என பிரச்சினை எண் 1 ஐ பொறுத்து இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

7. **தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 2**

விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், ஏற்கனவே 1 ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதை விபத்திற்கு காரணம் என்று முடிவு செய்துள்ள நிலையில், 2 ம் எதிர்மனுதாரரே அவரது ஓட்டுநரின் செயலான விபத்திற்கு முழு பொறுப்பாளர் ஆகின்றார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலிருந்து 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த பேருந்து 2 ம்

எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பது தெரிய வருகிறது. 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் செயலை ஏற்று மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார். எனவே 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என இப்பிரச்சனை எண் 2 க்கு இந்த தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

8. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 3</u>**

மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு என ஆராய்கையில் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 44 வயது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வயதை நிரூபிக்க தகுந்த சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்த போதிலும், மனுதாரரின் வயதை மறுத்து கட்சி எடுக்க எதிர்மனுதாரர்கள் இந்த தீர்ப்பாயத்தில் ஆஜராகவில்லை. மேலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் அவரது வயது 55 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் வயது 55 என இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரர் விபத்து சமயத்தில் கட்டிட வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/- வருமானம் ஈட்டி வந்ததாக மனுவிலும், ம.சா.1ன் சாட்சியத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு ஆதரவாக தான் வேலை செய்த கட்டிடங்களின் கட்டிட உரிமையாளர்களை சாட்சியாக விசாரிக்கவும் இல்லை. அதற்கான ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே மனுதாரரின் குறைந்த பட்ச மாத வருமானம் ரூ.6,000/- என்று இந்த தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு ஏற்பட்ட காய தன்மை, சிகிச்சைக்கான விபரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ.5 மற்றும் 6 ஆகிய ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. மனுதாரர் தனக்கு விபத்து ஏற்பட்டவுடன் சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவமனையில் முதலுதவி பெற்றுக்கொண்டு, பின்னர் கோவை கங்கா மருத்துவமனையில் 31.10.2011 முதல் 15.11.2011 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற விபரமானது ம.சா.ஆ.5 மருத்துவமனை விடுவிப்பு குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

9. மனுதாரர் மருத்துவ குழுமத்தின் முன்பு ஆஜராகி பெற்ற ஊன சான்று ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.9-ல் மனுதாரருக்கு வலது காலில் ஏற்பட்ட ஊனமானது நிரந்தர ஊனம் எனவும், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊன விகிதம் 65% எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.8 புகைப்படத்தில் அவரது வலது கால் முட்டுக்கு கீழே கால் நீக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆகவே கட்டிட வேலை செய்யும் மனுதாரர் ஒரு கால் இன்றி நின்று கொண்டு வேலை செய்ய இயலாது என்பது தெரிய வருகிறது.

10. <u>ஊனத்திற்கான இழப்பீடு</u>

மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனமானது 65% நிரந்தர ஊனம் என்று மருத்துவ குழு சான்று அளித்துள்ளதால் மாண்புமிகு உச்சநீதிமன்ற 2017 (2) TNMAC 609 (SC) என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரருக்கு Multiplier தலைப்பில் இழப்பீடு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது. எனவே மேற்படி வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் படி மனுதாரரின் வயது 55 என்பதை கருத்திற்கொண்டு, அவருடைய தோராய வருமானம் ரூ.6,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இலக்கமுறை பெருக்கி (Multiplier) 11 எனவும் இந்த தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது. எனவே வருமான இழப்பீடு (ரூ.6,000/- x 12 x 11 x 65%) ரூ.5,14,800/- ஊன சதவிகிதத்திற்கு இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

11. <u>போக்குவரத்து, ஊட்டச்சத்து</u>

மனுதாரர் போக்குவரத்து செலவினத்திற்கென இழப்பீடாக ரூ.25,000/-மும், ஊட்டசத்து எடுத்துக்கொள்ள வேண்டியதற்காக ரூ.15,000/-மும் கோரியுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.15,000/-மும், மனுதாரர் கோவை சென்று சிகிச்சை பெற்றுள்ளதால் மருத்துவமனை சென்று, வர ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக ரூ.15,000/-மும் இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

12. <u>வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு</u>

மனுதாரர் தனக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்கான இழப்பீட்டிற்கு ரூ.50,000/- கோரியுள்ளார். மனுதாரருக்கு வலது காலில் மூட்டுப்பகுதிக்கு கீழ் நீக்கப்பட்டுள்ளதால், அவர் வாழ்நாள் முழுவதும் சிரமத்தை அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளதால், அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/- இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

13. <u>மருத்துவ சிகிச்சையின் போது ஏற்பட்ட வருமான இழப்பு</u>

மனுதாரர் தனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவின் காரணமாக மருத்துவமனையில் சுமார் 15 நாட்களுக்கு மேல் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததால், அவர் சுமார் 4 மாதங்கள் வேலைக்கு சென்றிருக்க இயலாது. எனவே, விபத்து சமயத்தில் அவர் வேலை செய்யாததற்கு ஏற்பட்ட வருமான இழப்பீடாக 4 x ரூ.6,000/- = ரூ. 24,000/- கொடுக்கலாம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

14. **<u>சிகிச்சையின் போது ஏற்பட்ட மருத்துவ செலவினம்</u>**

மனுதாரர் சிகிச்சையின் போது மருந்துகள் வாங்கிய வகையில் மருத்துவ ரசீதுகள் ரூ.1,31,391.75/- மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு ரூ.1,31,390/- மருத்துவ செலவினத்திற்கு இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

15. மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

**<u>கணக்கீடு</u>**

| | | |
|---|---|---|
| ஊனத்திற்கான இழப்பீடு | ரூ. | 5,14,800.00 |
| வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | ரூ. | 50,000.00 |
| ஊட்டச்சத்து | ரூ. | 15,000.00 |
| போக்குவரத்து செலவினம் | ரூ. | 15,000.00 |
| மருத்துவ சிகிச்சையின் போது வருமான இழப்பு | ரூ. | 24,000.00 |
| சிகிச்சையின் போது ஏற்பட்ட மருத்துவ செலவினம் | ரூ. | 1,31,390.00 |
| மொத்தம் | ரூ. | 7,50,190.00 |

16. ஆகவே, விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.7,50,190/-ஐ மனுதாரருக்கு 2 ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

17. இறுதியாக,

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,

2. மனுதாரருக்கு ரூ.7,50,190/-(ரூபாய் ஏழு லட்சத்தி ஐம்பதாயிரத்து நூற்றி தொன்னூறு மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக 2 ம் எதிர்மனுதாரர் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,

3. மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. இந்த இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் **7.5%** வட்டி செலுத்த வேண்டுமென்றும், 2 ம் எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றம், கணக்கு எண் : 36192330088, **IFSC** எண் **SBIN**0000994 என்ற வங்கி கணக்கில் **NEFT/RTGS** முறையில் நேரடி வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டுமென்றும்,

5. 2 ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தவுடன் ரூ.5,50,190/- தொகையை வட்டியுடன் சேர்த்து மனுதாரர் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மீதமுள்ள ரூ.2,00,000/-ஐ ஏதாவது தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் 3 ஆண்டுகளுக்கு வைப்பீட்டில் வைத்து, அதற்குரிய வட்டியை 3 மாதங்களுக்கு ஒரு முறை மனுதாரர் பெற்றுக்கொள்ள உத்திரவிட்டும்,

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.14,502/- நிர்ணயிக்கப்படுகிறது.

7. இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.10/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடைமனு எண் 3349/2011 தாக்கல் செய்து உத்தரவு நாள் 22.12.2011 ன் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.6,865/-ஐ மனுதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறினால் உத்தரவு தேதியிலிருந்து நீதிமன்றக் கட்டணம் செலுத்தும் தேதி வரை மனுதாரர் வட்டி பெற தகுதியற்றவர் என உத்தரவிடப்படுகிறது.

8. மனுதாரர் வங்கி கணக்கு விபரத்தை கொடுத்தவுடன் அவருக்கு சேர வேண்டிய தொகை அவர் வங்கி கணக்கில் செலுத்தி வைக்க வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

<u>**மற்ற விபரங்கள்**</u>

| | |
|---|---|
| மனு தாக்கலான தேதி | 30.11.2011 |
| உத்தரவு நாள் | 20.04.2022 |
| இழப்பீட்டுத்தொகை | ரூ.7,50,190/-(ரூபாய் ஏழு லட்சத்தி ஐம்பதாயிரத்து நூற்றி தொன்னூறு மட்டும்) |
| வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம் | மனு தேதியான 30.11.2011 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து |

| | |
|---|---|
| | 60 நாட்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ.6,875/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | ரூ.10/- |
| மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.6,865/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம் | மனுதாரர்கள் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.6,865/-ஐ உத்தரவு தேதியான 20.04.2022 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். |
| அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை | ரூ.6,731.50/- |
| மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா | இல்லை |

**<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>**

| மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 6,875 | 00 |
| வக்காலத்து கட்டணம் | 5 | 00 |
| சான்றாவண கட்டணம் | 20 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 14,502 | 00 |
| கட்டளை சார்வு கட்டணம் | 69 | 00 |
| எழுத்துக்கூலி | 200 | 00 |
| மொத்தம் | 21,671 | 00 |

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.21,671/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

<u>இணைப்பு:-</u>

**(1) மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்-**

ம.சா.1 .. திரு. சின்னசாமி (எ) சின்னுசாமி

ம.சா.2 .. திரு. சிவநாதன்

**(2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல் -** இல்லை

**(3) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல் -**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 .. | முதல் தகவல் அறிக்கை | - நகல் |
| ம.சா.ஆ.2 .. | விபத்து பதிவேடு | - நகல் |
| ம.சா.ஆ.3 .. | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | - நகல் |
| ம.சா.ஆ.4 .. | குற்ற இறுதியறிக்கை | - நகல் |
| ம.சா.ஆ.5 .. | மருத்துவமனை விடுவிப்பு குறிப்பு | - அசல் |
| ம.சா.ஆ.6 .. | மருத்துவ ரசீதுகள் | - அசல் |
| ம.சா.ஆ.7 .. | மனுதாரரின் புகைப்படம் | - அசல் |
| ம.சா.ஆ.8 .. | மனுதாரரின் புகைப்படம் | - அசல் |
| ம.சா.ஆ.9 .. | ஊன சான்று | - அசல் |
| ம.சா.ஆ.10 .. | நுண்கதிர் படம் | - அசல் |
| ம.சா.ஆ.11 .. | ம.சா.2 ன் ஆதார் அட்டை | - நகல் |

**(4) எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல்** - இல்லை

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

<u>குறிப்பு:-</u>

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.